

திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற மத்திய, வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் மற்றும் கழகத்தின் சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு உரையாற்றினார். அருகில் மாவட்ட அவைத் தலைவர் பேரூர் தர்மலிங்கம், அம்பிகாபதி, மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், மாநகர மேயர் அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன் ஸ்டாலின் குமார், கதிரவன், பழனியாண்டி, மாவட்ட துணை செயலாளர் முத்துச்செல்வம் விஜய் ஜெயராஜ் கருணாநிதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த் பொருளாளர்கள் தர்மன் ராஜேந்திரன் துரைராஜ், செயற்குழு உறுப்பினர் காஜாமலை விஜய், டோல்கேட் சுப்பிரமணி, குடமுருட்டி சேகர், சிவந்த லிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மார்ச் 1 முதல்வர் பிறந்த நாள் விழாவை நலத்திட்ட உதவிகளுடன்

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



புதுக்கோட்டை, பிப். 27 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் முழுவதும் மார்ச் 1 கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள், மரம் நடுதல், ரத்த தானம் செய்தல் கழக கொடி ஏற்றுதல் என பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் எழுச்சியாக கொண்டாடுவோம் என புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத் துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டு மக்களின் இதயங்களை தன்பால் தன் வயப்படுத்தி தமிழகத்தின் வளர்ச்சிக்கு ஓயாது உழைக்கும் ஒப்பற்ற தலைவருக்கு பிறந்தநாள் விழா. இளமைக்காலம் முதல் இரு வண்ணக் கொடி ஏந்தி, இயக்கம் காத்து தொண்டராய் உழைத்து உழைத்து மாபெரும் இயக்கத்தின் மகத்தான தலைவராக உயர்ந்திட்ட உத்தமருக்கு பிறந்த நாள் விழா,

இந்தியாவில் உள்ள மாநில முதல்வர்களிலேயே சிறந்த முதல்வர் என பெயர் பெற்றிருந்தாலும், இந்தியாவின் சிறந்த மாநிலம் தமிழ்நாடு தான் என பெயர் பெறுவதுதான் நமக்கு பெருமை என சூளுரைத்து ஓயாமல் உழைத்து வரும் உன்னத தலைவர், உழைப்பால், தியாகத்தால், தொண்டால், அன்பால், நிர்வாகத் திறமையால், இமயம் என புகழ் பெற்றிருந்த போதும் நம்மை உருவாக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் தடம் பற்றி தொண்டரோடு தொண்டராக களத்தில் நின்று இரு வண்ணக் கொடி ஏந்தி களமாடி வருகிற வரலாற்று தலைவனாம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஏழை எளியோர் பயன்பெறும் வகையில் நல உதவிகள் வழங்குதல், கண் தானம், ரத்த தானம் செய்தல், மார்ச் 1 அன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல், நோயாளிகளுக்கு ரொட்டி பழங்கள் வழங்குதல், மாணவர்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்குதல், மரம் நடுதல் , நீர்நிலைகளை செப்பனிடுதல், கழக கொடி ஏற்றுதல் மற்றும் கவியரங்கம், கருத்தரங்கம், வாழ்த்தரங்கம் நடத்துதல் என புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் சிறப்பாகவும், எழுச்சியாகவும் கொண்டாடிடுவோம்.

இதற்கான ஏற்பாடுகளை மாநில , மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு , பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் சிறப்பாக செய்திட வேண்டும்.

இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் - அருண்நேரு எம்.பி. - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# பெரம்பலூர் மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!



பெரம்பலூர், பிப். 27 -

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றியங்களில், கழகதுணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்.பி., வழிகாட்டுதல்படி, போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கினங்க,

பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் கீழ்க்கண்ட நாட்களில் நடைபெறுகிறது.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் (எனது) தலைமையில் நடைபெறும் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கே.என். அருண்நேரு.எம்.பி., பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் தங்க.சித்தார்த், குன்னம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் ஏ.கே. அருண் கலந்து கொள்கின்றனர்.

இது குறித்து பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

27.02.2025, வியாழக்கிழமை,

காலை 10 மணி வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம், JPS திருமண மண்டபம், கிருஷ்ணாபுரம்.

27.02.2025, வியாழக்கிழமை ,மதியம் 12 மணி, ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம், கலைஞர் திடல், கொளக்காநத்தம்.

27.02.2025, வியாழக்கிழமை ,மாலை 5 மணி,வேப்பூர் வடக்கு ஒன்றியம்,AKG திருமண மண்டபம், சு.ஆடுதுறை.

28.02.2025, வெள்ளிக்கிழமை, காலை 10 மணி, ஆலத்தூர் மேற்கு ஒன்றியம் KMMT திருமண மண்டபம், செட்டிகுளம்.

28.02.2025, வெள்ளிக்கிழமை,

மதியம் 12 மணி பெரம்பலூர் ஒன்றியம். முத்து கிருஷ்ணா மக்கள் மன்றம். பெரம்பலூர்.

இந்த கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

அந்தந்த ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டத்தை சிறப்பாக நடத்திட வேண்டும் என்று வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!



நாமக்கல், பிப். 27 -

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி விடுத்துள்ள அறிக்கையில், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் இன்று (27.02.2025 - வியாழக்கிழமை) மாலை 04.00 மணிக்கு திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள ராதா பிரசாத் ஹோட்டலில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் இரா.நடனசபாபதி தலைமை தாங்குகிறார்.

இக்கூட்டத்திற்கு தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், அனைத்து சார்பு அணி மாவட்ட அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 01.03.2025 அன்று கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளினை சிறப்பாக கொண்டாடுவது குறித்து.

கழக ஆக்கப் பணிகள் குறித்து

இவ்வாறு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவித்துள்ளார்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் நகர தபால் நிலையம் முன்பு மாநில மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன்,மாநில மாணவரணி துணை செயலாளர் சேலம் ரா.தமிழரசன் ஆகியோரின் அறிவிப்பின்கீழ் தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் பி.தர்மசெல்வன்,தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ. மணி,முன்னாள் மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ சுப்ரமணி ஆகியோர் வழிகாட்டுதலின் படி தர்மபுரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் என்.பி.பெரியண்ணன் தலைமையில் மும்மொழி கொள்கைக்கு எதிராக பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாணவர்கள் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு ( FSOTN ) சார்பில் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.ஆர்ப்பாட்டத்தில் மாணவரணி துணை அமைப்பாளர்கள் கௌதம், அன்பரசு,வேடியப்பன் மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் பல்வேறு மாணவர் சங்கம் மற்றும் மாணவர் இயக்கத்தின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,நிர்வாகிகள் கூட்டணி கட்சியினர், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியர் ரோஜா வினோதினி தலைமையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன் பங்கேற்று பள்ளி வளர்ச்சிக்கு ரூ 1 லட்சம் நிதியுதவி வழங்கினார்.விழாவில் புலவர் சந்தானமூர்த்தி, கல்வியாளர் பாலசுப்பிரமணியம், திமுக மாவட்ட பிரதிநிதி மெடிக்கல் குமார். இளைஞரணி சிவா, பிடிஏ பொருளாளர் சண்முகசுந்தரம், பள்ளி மேலாண்மை குழு தலைவி தீபாராணி, உதவி தலைமை ஆசிரியர் ரெஜினா, ஆசிரியைகள் சரஸ்வதி. பூங்குழலி, அருட்செல்வி ஆகியோர் உள்ளனர்.

# கும்பகோணம் மாநகர தி.மு.க. கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் அறிக்கை!

தஞ்சாவூர் பிப்.27 -

கும்பகோணம் மாநகரச்.செயலாளர்சு.ப.தமிழழகன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இன்று (27.02.2025 - வியாழன்) மாலை 04.00 மணிக்கு கும்பகோணம் காந்தியடிகள் சாலை ராயா மஹாலில் மாநகர அவைத் தலைவர் எஸ்.வாசுதேவன் தலைமையில் கும்பகோணம் மாநகர தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, அமைச்சர் முனைவர் கோவி.செழியன் , செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, தொகுதி பார்வையாளர் சீ.க.மறைமலை ஆகியோர் கருத்துரையாற்றுகின்றனர்.

அதுபோது மார்ச்1 முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா, மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது என்று சு.ப.தமிழழகன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கும்ப கோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



ஒன்றிய பா.ஜ.க அரசு மும்மொழி கொள்கை என்ற பெயரில் தமிழ்நாட்டில் இந்தியை திணிக்கும் முயற்சியை கண்டித்து புதுக்கோட்டையில் வடக்கு மாவட்ட. மாணவரணி மற்றும் அனைத்து மாணவர்கள் அமைப்பின் கூட்டமைப்பு சார்பில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.எஸ்.ச.இளையசூரியன் தலைமையில், துணை அமைப்பாளர்கள் ஆர்.கே.சபாபதி, பெ.தெய்வாணை, செ.பிரசன்னா, பி.சதீஷ்குமார், கோ.அண்ணாதுரை ஆகியோர் ஒருங்கிணைப்பில் நகர்மன்றத்தில் இருந்து பேரணியாகச் சென்று தலைமை தபால் நிலையம் எதிரே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிகழ்வில் மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் , கழக இலக்கிய அணி துணை தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். நிகழ்வில் த.சந்திரசேகரன், சுப.சரவணன், கே. ஆர்.என்.போஸ், அரு. வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, சு.சண்முகம், தென்னலூர் எம்.பழனியப்பன், என். சாத்தையா, எம். செந்தில்குமார், கே.எஸ்.சந்திரன், தவ . பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், வெ.முத்துக்கிருஷ்ணன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் மாணவர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

# திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் – மேயர் ந.தினேஷ்குமார் அறிக்கை!



திருப்பூர், பிப் -

திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என்று மாவட்டப் பொறுப்பாளர் - மேயர் ந.தினேஷ்குமார் அறிவித்துள்ளார்.

இது குறித்து அறிவிப்பு வருமாறு:

திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம் இன்று (27.02.2025 - வியாழக் கிழமை) மாலை 5.00 மணியளவில் திருப்பூர் அவினாசி சாலை (SAP தியேட்டர் அருகில்) ஹோட்டல் “விஸ்வாஸ்” 4வது தளத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

அதுசமயம் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத் திற்குட்பட்ட மாநில, மாவட்ட,

மாநகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1.கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா குறித்து

4.கழக ஆக்கப்பணிகள் - குறித்து.

இவ்வாறு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ந. தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.



நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் மோகனூர் சாலை முல்லை நகரில் உள்ள கலைஞர் அறிவாலயம் பேராசிரியர் அரங்கில் நடைபெற்றது. மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார்.இக்கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி, சேந்தமங்கலம் சட்டப்பேரவை உறுப்பினர் கே.பொன்னுசாமி மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர், சார்பு அணிகளின் நிர்வாகிகள், நகர மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.பி.பி.சாமி

**பிப்ரவரி 27 (2020)**



பாரம்பரிய தி.மு.க. குடும்பத்தில் பிறந்து, தனது மீனவப் பகுதியில் கழகம் வளர பாடுபட்டதோடு, மீனவ சமுதாயம் முன்னேற பாடுபட்டவர்.

திருவொற்றியூர் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர், நகர துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர், மாநில மீனவர் அணிச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து பணியாற்றியவர்.

2006, 2011 ஆகிய இரு முறை திருவொற்றியூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றதோடு, 2006ல் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் மீன்வளத் துறை அமைச்சராக பணியாற்றினார்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**